




ஓலை 188| ஓசை 311| ஆகஸ்ட் 2026

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிஞர் வண்ணதாசன்

## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

**அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு**

## பொருள்

**அன்பின் வழியில்தான் உயிரின் உண்மையான நிலை உள்ளது. அன்பு இல்லாதவர்களின் உடல் வெறும் எலும்பைத் தோலால் போர்த்திய உடம்பு போன்றது.**

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.

**அகர முதல இலக்கியப் பேரவை**

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

# எங்குமினி தமிழே வெல்லும்!

பாவகை : அறுசீர் மண்டிலம்

விண்ணெங்கும் நிறைந்த மேகம்;
விண்மீன்கள்; நீல வண்ணம்;
மண்முழுதும் நிறையும் மாரி;
மாவியற்கை நிறைந்த வையம்;
வெண்ணிலவு, பரிதிப் பாய்ச்சும்
வையத்தின் வெளிச்ச வெள்ளம்;
என்றிவைகள் போல்நி லைத்தே
எங்குமினி தமிழே வெல்லும்!

பெரியாரின் கைத்த டிக்கே
பெரும்மூடம் ஒடி னாற்போல்,
பரிபோன்று கழுதை யானப்
பிறமொழிகள் பிதற்றி னாலும்,
உரியதொரு அரணாய் நின்று
உமியாக ஓட வைத்து,
எரிநெருப்பாய் எரித்துக் கொன்று,
எங்குமினி தமிழே வெல்லும்!

எங்குமினி தமிழே வெல்லும்;
இடரெனினும் நிமிர்ந்தே நிற்கும்;
பொங்குகடல் போலப் பொங்கும்;
பாரினிலே முதன்மைப் போன்று
இங்கென்றும் இறுதி யாக
இருக்கின்ற மொழிவி தாகும்;
மங்காத மொழித்த மிழ்தான்
மண்ணிலென்றும் ஒளிர்ந்தே வாழும்!






தன்னலம் அகற்றி
தண்மையாய் நடத்தல்
அன்புடன் அணைத்தே
அண்டியோர்க் குதவல்
இன்னலைத் தடுத்தே
இன்னயம் கழறல்
என்றுமே உழைத்தல்
ஏற்றமே பெறுதல்
ஒன்றியே இருந்தே ஒல்கிப்
பன்னலாய்ச் சிறந்தே
பன்னினால் உயர்வே



கவிஞர் செ. கலைவாணி

# குறுங்கவிதைகள்

விழிகளை விற்று
வாங்கிய ஓவியத்தில்;
என்னைப் போலொரு
குருட்டு யாசகன்.
ஓவியத்தை
பார்த்தவர்கள் சொல்ல
நான் கேட்டது.
*

நீ வந்த நேரம்
உன்னை உபசரிக்க;
அன்பைத் தவிர
என்னிடத்தில்
வேறெதுவுமில்லை.
*

என்னவளின்
கண்மை தீர்ந்து
போனதால்;
தற்போது யாருக்கும்
என்னிடத்தில்
கவிதைகளில்லை.
*



மௌனம்
சுமக்கும் பூக்கள்
மரணத்தின் முடிச்சை
விடுவித்த கணம்
சருகாகின!
*

கைகளால்
வானத்தை அளந்தால்
நீயும் பறவை.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# ஆதார நாதம்

மௌனம்-ஆதார நாதம்-
செயலற்ற ஒரு செயல் செய்ய
பேச்சற்ற ஒரு பேச்சே மௌனம்
அமைதியின் ஆதாரநாதம்!

அது ஒன்றே சாதனம்!
ஆதார நாதம்
ஓசையற்ற நினைவு

ஆசையற்ற உள்ளம்
விசையற்ற நிலையில்
நசையற்ற செயல்திறன்

ஆம்!
அதுவே மௌனம்.



கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# அமிழ்தினும் உயர்சுவை தமிழ்ச்சுவையே!

அமுதென்றுதமிழைச் சொன்னவர்கள் சொன்னார்கள் சற்றுகுறைவாக;
அமிழ்தினுமுயர்சுவை கொண்டுதித்திக்கா தினித்திடுமுயர்சுவை தமிழ்ச்சுவையென்பேன்;
அகிலமிது கண்ட மொழிகளில் அளவற்ற
அழகான அன்பைச் சொல்வது தமிழோன்றே!
அறியாரிதனை அகிலமிதில் தமிழகம்நீங்கலாய் வேறெங்கிருப்பினும்
அடியேனதனைப் பிழையெனவொரு நாளும்செப்பேன் ஆயினும்
அன்னைத்தமிழைத் தாய்மொழியாய்ப் பெற்றும்புத்தி இன்றி
ஆங்கிலமோ வேறொருமொழியோ அன்பைக்கற்பிக் கவந்ததென்று
அறைவரைக்கண்டால் அடியேனுக்கு உடனடியாய் நினைவில்வருவது
அருமைப்பாவலன் பாரதிதாச னுரைத்த எழுச்சிமிகுவடியாம்,
"கொலைவாளினை எடடாமிகுகொடி யோர்செயலறவே"
சனாதனதர்மத் தில்பிறந்தவடியேன் எந்தனிறை படங்களைச்சிலைகளைச்
சந்திக்கநேர்ந்தாலும் பெரிதாயலட்டிக் கொண்டுதொழுது நின்றதில்லை!
சிற்சிலநேரம் பிறசமயம்சார் திருவுருவப்படங்களைக் கண்டவிடத்தும்
சித்தன்போக்காய் கடந்துபோனது உண்டுசிவனை உணரவிரும்பி!
ஆயினுமெங்கோ ஓரிருவிடங்களில் இரத்தம்சொட்டும் இதயக்காட்சி
அருளிடும்கர்த்தர் திருப்படங்கண்டு சற்றதனை வருந்திப்பார்த்து
அந்தமனிதரென் னவரும்பாடு பட்டிருப்பாரென வெண்ணிகடந்து போனதுண்டே!
தமிழாசிரியனாய்ப் பாடம்கற்பித்த காலமதிலடியேன் கருத்தோடு
தகறாறுசெய்யும் கருத்துகளிருப்பினும் கடமையெனவதை நடத்தியதுண்டு!
இயேசுவின்புகழ்ப் பாடும்காப்பியம் இரட்சணிய யாத்திரிகம்
இயம்பிடும்சூழல் வந்துற்றவேளை இயேசுவைப்பற்றிய அறிவில்
சிறியேனெந்தன் கடமையாயத னைச்சரியாய்ச் செய்யவெண்ணி
செய்தபோதும் குரிசிலவர் தொங்கியதைச் சொல்லும்
செய்யுளைச்சொல்லிட யெந்தன்கண்களும் கலங்கியழுதன அவர்துயர்க்காகவே!
எச்சமயமோ எவர்படுதுயரமோ எவர்புகழோ ஏதாயினுமதை
எந்தனன்னை மொழியாம்செம்மாந்த தமிழிலுரைத்தா லதுகரையாத
எத்தகையகல் இதயத்தையும் கரைத்திடுமெனவுணு ராதையு ணர்ந்தேன்;
பைப்பிளோகுரானோ பகவத்கீதையோ வேறெதுவோவதை எம்மொழிக்காட்டிலும்
பைந்தமிழில் சொன்னாலது அமிழ்தினுமினிக்கும் எனக்கண்டேனே!



இரட்சணிய யாத்திரிகம்.
தன்னரிய திருமேனி சதைப்புண்டு தவிப்பெய்திப்
பன்னரிய பலபாடு படும்போதும் பரிந்தெந்தாய்
இன்னதென அறிகில்லார் தாஞ்செய்வ திவர்பிழையை
மன்னியுமென் றெழிற்கனிவாய் மலர்ந்தார்நம் அருள்வள்ளல்"

கவிஞர் தீந்தமிழ்திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி

# உயிர் வரைந்த ஓவியம்

மௌனமாய் இருந்த
என் மனதில்,
புயலென நுழைந்த
புது வசந்தமே!

உன் ஒற்றைப்
பார்வையின் வீச்சிலே,
என் இதயத்
துடிப்பும் நின்றதே!

காற்றினில் அசையும்
உன் கூந்தல்,
கவிதை சொல்லும்
கலைக்கூடம்!

காரணமே இன்றி
உனை நினைக்கையில்,
நெஞ்சில் வழியுதே
தேனமுதம்!

உன் புன்னகை
சிந்தும் ஒளியினிலே,
இருண்ட என்
இரவும் விடியுதே!

உன் கைவிரல்
கோர்த்து நடக்கையிலே,
பூமிப் பந்தும்
சுருங்குதே!



வார்த்தைகள் தேடி
தவிக்கின்றேன்,
உன் அழகை
வர்ணிக்க முடியாமல்!

காலங்கள் கரைந்து
போகுதே,
உன் நினைவில்
நான் தூங்காமல்!

உயிரே! உந்தன்
அருகாமை மட்டும்தான்
என் உலகிற்கு
ஒளியைத் தருதே!

விழி மூடினாலும் பிரியாத
கனவாய் நெஞ்சில் வாழ்கிறாய்!
மறுஜென்மம் ஒன்று
எனக்கிருந்தால்,
அங்கேயும் எனக்காய் பிறப்பாயா?

என் மூச்சுக் காற்றின் ஈரம் நீ,
என் வாழ்வின்
மொத்த அர்த்தம் நீ!

கவிஞர் கோ. கே. ஏழுமலை, நத்தாமூர், உளுந்தூர்பேட்டை

# பிணவறை

வாழும்போது அகங்காரத்தின்
ஆடைகளுடன்,
ஆடம்பரத்தின்
முகங்களாய் வாழ்ந்து,

நாட்கள் தோறும்
"நான்" என்ற அகந்தையுடன்
திமிராய் திரிந்தவன்,

மரணத்தின் முன்னே
ஆடைகள் களையப்பட்டு,
பிணவறையில்
எண்களாய் மாறுகிறான்.

அறுபட்ட நிலையில்,
அம்மணமாய்,
முகவரி தொலைத்த
பிணமாய் கிடக்கிறான்.

"என்னுடையது" என்ற
ஏளனத்துடன் வாழ்ந்தவன்,
பிணவறையில்
குப்பைகளாய் மாறுகிறான்.

மனிதனின் ஆட்டம்
மரணத்தின் அறையில்
அமைதியின் அடையாளமாய்
முடிவடைகிறது.



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# உனைப் பார்த்த அந்த நிமிடம்

வலி உணர்ந்தேன்,
வாழ்வில் மறந்திருந்த
வலியை உணர்ந்தேன்.
உனைப் பார்த்த வேளை,
உலகமே நிலையில்லை எனத்
தெளிந்து கொண்டேன்!

காலம் மாறும் கண்டேன்,
கண்ணில் அவள் சோகம் கண்டேன்.
கருத்தாய் நானும் அவளிடம்
கனிவாய் மொழி பகர்ந்தேன்,
நம்பிக்கையில்!



விநாடிக்குள் மாற்றம்,
விசாரணைகள் எம்மாத்திரம்?
குறை கூறும் மானிடர்,
மறை அறியாதோர் சிலர் என
உணர்ந்தேன்!

அமைதிக்குள் சில மணி நேரம்,
ஊமையாய் நானும் அங்கே
மெய்ப்பொருள் விளக்கிட
கைவசம் என்னிடம்
ஏதும் இல்லை!

அவள் கற்றுத் தந்தாள்
அந்த நிமிடம் எனக்குள்
நம்பிக்கையை.
முற்றும் மறந்தே நானும் என்னை,
பற்றிக் கொண்டேன் உன்னில்!

கவிஞர் திருமதி ஜுவனீற்றா கிங்ஸ்லி, கல்முனை, இலங்கை

# உண்மையான உயர்வு

ஒழுக்கம் இல்லாத வாழ்வு
உயர்ந்தாலும் தாழ்வுதான்.
கல்வி கற்று, கல்லாதவரிடம்
கண்ணியமாக நடக்காதபோது,
கற்ற கல்வியில் இல்லை உயர்வு!

கண் சிமிட்டிக் கதை பேசும் மனிதனிடம்
காசு பணம் இருந்தும் என்ன பயன்?
உதவி என்று கேட்டு விட்டால்
ஒதுங்கிக் கொள்வதில் என்ன நியாயம்?



ஓடி ஓடி உழைக்கும் நபரைப் பார்த்து,
ஓடாமல் ஒய்யாரமாய்
கால்மேல் கால் போட்டுக்கொண்டு,
கடினமாக உழைக்கும் நபரின் பணத்தைப்
பறிப்பது முறையோ?

நோய்வாய்ப்பட்டு
நொந்து போயிருப்பவனைப் பார்த்து,
"உன் காற்று எனக்குப் பட்டால்
தீட்டாகிவிடும்" என்று கூறுவது
நியாயமோ?

உனக்கென இருப்பவர் யார் இவ்வுலகில்?
தனக்கென இருப்பதைச்
சிறிதேனும் கொடுத்து விடு;
தர்மத்தின் பேரொளியில்
உண்மையான உயர்வை அடைந்திடு!

கவிஞர் பானு ஜிப்ரி, சாய்ந்தமருது, இலங்கை

# இதயத் துடிப்பானாய் இனியவளே

கடலின் அலையாய்
கனிவாய் ஆர்ப்பரிப்பவளே!
விண்மீனின் சிமிட்டலாய்
வியப்பூட்டிச் செல்கிறாயே!



முழுமதியின் ஒளியாக
மனதினில் ஒளிர்கிறாயே!
தென்றலாய்த் தழுவிட,
தேகமெங்கும் சிலிர்ப்பே!

ஈர்த்திட்ட பார்வையில்
ஈயமாய் உருகுகிறேனே!
இதழோரப் புன்னகையில்
இதயமும் இனிதானதே!

உணர்வான உறவே,
உரிமையான உயிரே!
வசியமாக்கினாய் என்னையே,
வசமானேன் உன்னிடமே!

நெஞ்சத்தின் துடிப்பினில்
நேசமான என்னவளே!
நளினமான நங்கையே,
நாணலாய் வளைகிறாயே!

தாங்கிடும் கரங்களில்
தாமரையாய் மலர்ந்தாயே!
செவ்விதழ்ச் சிரிப்பினில்
சிதறுகிறேன் அன்பே!

காதலின் நாயகியே,
கனிவானேன் கண்ணே!
அனலிடை மெழுகானேன்,
ஆனந்தத்தில் கரைகிறேன்!

இலக்கணமான இளையவளே,
இலக்கியத்தில் இனியவளே!
இதயத் துடிப்பானாய், இனியவளே,
என்னுள் தானே வாழ்கிறாயே!

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# குரங்குக்குட்டி



குரங்குக்குட்டி ஓடுது
கும்மாளந்தான் போடுது
மரத்தின் மேலே ஏறுது
மல்லாந்து கீழே குதிக்குது

குட்டிக்கரணம் போடுது
குறுகுறுன்னு சிரிக்குது
வட்டமாகச் சுற்றுது
வாயைத்திறந்து காட்டுது

வாளித்தண்ணீர் பார்த்ததுமே
வாயைவைத்துக் குடிக்குது
ஆளில்லாத நேரத்துல
அதிரசத்தைத் திருடுது

குரங்காட்டி கோலெடுத்தா
கொஞ்சமாகச் சிணுங்குது
அருகில்வந்து தட்டைக்காட்டி
அதுவும் காசு கேக்குது

கழுத்தின்மீது கோலை வைத்து
காளை மேய்க்கப் போகுது
அழுகின்ற குழந்தைக்கெல்லாம்
அழகாய்ச் சிரிப்பு காட்டுது

அம்மா குரங்கைப் பார்த்தாலே
அதன் முதுகில் ஏறுது
சும்மா சோம்பிக் கிடக்காமல்
சுறுசுறுப்பாய்ச் சுத்துது

கவிஞர் வளவ. துரையன், முகலிவாக்கம்

# முரணின் மௌனம்



சிரிக்கும் உதடுகளுக்குள் சோகம் உறங்கும்,
அழும் கண்களுக்குள் ஆறுதல் விழிக்கும்.
கூட்டத்தில் தனித்திருக்கும் கூட்டம் ஒன்று,
கூட்டமாய் இருந்தும் தனிமை கொல்லும்.

பேசாத வாய் ஆயிரம் கதை சொல்லும்,
பேசும் வாய் பல உண்மைகள் மறைக்கும்.

நெருங்க வருபவரைத் தூரம் தள்ளும்,
தூரம் நிற்பவரை நெஞ்சில் நிறுத்தும்.
கொடுக்க முடியாத கைகள் அதிகம் கொடுக்கும்,
வாங்க விரும்பாத கைகள் எல்லாம் பறிக்கும்.

இருட்டுக்குள் வெளிச்சம் தேடும் விட்டில்,
வெளிச்சத்துக்குள் இருள் வாழும் மனிதன்.
மழை வந்தால் நனையப் பயப்படுவோம்,
வியர்வையில் குளித்து வாழ்க்கை தேடுவோம்.

கடலைப் பார்த்து அழகு சொல்வோம்,
கண்ணீரைப் பார்த்துக் கல்லாய் இருப்போம்.
வெற்றி வந்தால் தலைகால் புரியாது,
தோல்வி வந்தால் துவண்டு விடுவோம்.

அடுத்தவர் வலியைக் கதையாய்க் கேட்போம்,
நம் வலியை உலகம் அறியக் கூடாதென்போம்.
கனவில் மட்டும் கோட்டை கட்டுவோம்,
விழித்ததும் நிஜம் கண்டு பயப்படுவோம்.

நேற்று சொன்ன வார்த்தை இன்று மாறும்,
இன்று சொல்லும் சத்தியம் நாளை பொய்யாகும்.
பூவில் முள் இருப்பதைக் குறை சொல்வோம்,
முள்ளில் பூ மலர்வதை மறந்து விடுவோம்.

முரண்தான் வாழ்க்கை என்று சொல்லி,
முரணில்லாமல் வாழத் துடிக்கிறோம் நாம்.
ஒருநாள் புரியும் இந்த உண்மை
முரண் இல்லையேல் இசையும் இல்லை!

கவிஞர் நஸ்ரீனா, குருநாகல் (இலங்கை)

# பிரிந்த வலியோடு அன்னையவள்

நேற்று வரைக்கும்
என் முந்தானை பிடித்து நடந்த கை,
இன்று ஒரு வார்த்தையில்
விலகிப் போய்விட்டதே.

கோபத்தில் நீ உரக்கப் பேசினாய்,
நான் அமைதியாகக் கதவை மூடினேன்.
ஆனால், கதவுக்கு அந்தப் பக்கம்
என் இதயம்தான் உடைந்து விழுந்தது.

சாப்பாட்டு மேசையில் இரண்டு தட்டுகள்.
ஒன்றில் சோறு ஆறுகிறது,
இன்னொன்றில் என் மூச்சு ஆறுகிறது.

"நீ என்னைப் புரிஞ்சுக்கல" என்று நீ சொன்னாய்.
"நான் உன்னைப் பெற்றவள் இல்ல"
என்று நீ சொல்ல,
பெற்ற வயிறு எரிகிறதடா மகனே!

ஜன்னல் வழியாகப் பார்க்கிறேன்.
நீ போன திசையில்
இன்னும் உன் செருப்புச் சத்தம்
கேட்பதுபோல் இருக்கிறது.

ஒருகாலத்தில்
உன் தொட்டிலை ஆட்டிய கை,
இப்போது தனியாகத்
தலையணையைத் தடவுகிறது.
தனிமையில் அதையே கட்டிப்பிடிக்கிறது.



ஒரு வார்த்தை
"அம்மா" என்று சொல்லுடா
நான் உன்னைப்
பத்து மாதம் சுமக்கவில்லை என்றாலும்,
உன்னை என் உயிராய் சுமந்தவளடா.

நான் செய்த தவறுகள் இருந்தால் கூட
மன்னித்துவிடுடா.
வீடு பெரிதாக இருக்கிறது.
ஆனால்,
நீ இல்லாமல்
எல்லாமே காலியாக இருக்கிறது.

வா மகனே! உன் தாய்த்தோழி.
என்றும் உனக்கானவள்.
வழியோரம் விழி வைத்து காத்திருக்கிறேன்.

வலி கூட சுகம் தரும், உன் வருகையாலே.
வா மகனே!
என் வாசலும், என் மனமும்,
என் விழிகளும்
உனக்காகவே காத்திருக்கின்றன...

கவிஞர் முர்ஷிதா பேகம், கண்டி (இலங்கை)

அல்லவை இழைத்த ஆறலைக் கூளிப்படை
அழித்தொழித்திட ஆதன்வாழி புறப்பாடு
அலறி ஒடுங்கும் ஆறலைக்கூளியர்
அகம் களிந்த மள்ளர் நிலம்.




கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ்நாடு

# நீங்கள் யார்?



எந்தையர் சிந்திய வியர்வையும்,
எம் சகோதரர்களின் உழைப்பும்,
எங்கள் கல்வியால் ஈட்டிய வரவும்
கட்டியெழுப்பிய அடுக்குமாடி
நீங்கள் ஏறிச் செல்ல படிகளுடன்.

வீட்டுக்கும் வெளிக்குமாய்
பயணிக்கச் சொகுசு மகிழுந்து,
பெருமிதத்தோடு எம்மைக்
கூட்டிச் செல்ல நகைகள்.

உங்களுக்கிருக்கிறதா முதுகெலும்பு?
உங்களுக்கிருக்கிறதா மனச்சாட்சி?
உங்களுக்கிருக்கிறதா கருணை?

சீதனம் என்ற பெயரில்
பெண்களைச் சுரண்டி வாழும்
மாப்பிள்ளை எலிகளே.
நீங்கள் யார்?

நாங்கள் கட்டிய வீட்டில்
முட்டையிட வரும்
குயில்கள் நீங்களேதான்.

உங்கள் குரல்வளைகளை
நசுக்காதா இந்தச் சீதனம்?
உங்கள் இறக்கைகளை
ஒடிக்காதா இந்த ஆதனம்?

பெண்ணின் உழைப்பைச் சொத்தாக்கி,
அவள் வாழ்வையே விலையாக்கும்
இந்தச் சீதனச் சங்கிலி
எப்போது உடையும்?

கவிஞர் சம்மாந்துறை மஷூறா, மருதமுனை

# உன் காலடி ஓசையிலே காதல்!

உள்ளத்தின் திறவுகோலின்
உறைவிடம் நெஞ்சத்திலே...
உன்னை ஏந்திய
உதயம் அறிவாயோ?

மௌன மொழியில் விழியாலே
மௌனங்களைச் சந்திக்கிறாய்...



நானொரு பாதி,
நாட்களின் மீதியில்
நாலடி நடக்கையில்
நானே மிதக்கிறேனோ?

மென்மலராய் விரிந்த
மேகக் கூட்டத்தில் பறக்கிறேனா?
மேலாடையோ பாலாடையாய்
மேனியிலே சிலிர்க்கிறதோ?

இன்பம் தங்கும்
இடங்கள் நந்தவனம்;
இன்றே அதுதான்
இருவரின் அந்தரங்கம்.

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# இவளே!



இயற்கையின் சீற்றம்
உன்னைத் தீண்டுமுன்
ஓரமாய் சாய்ந்து கொள்!

அவர்கள் அப்படித்தான்
என்று அறிந்த பின்னும்,
உன்னை நீ நியாயப்படுத்த
அவர்களின் பின் ஓடாதே!

உன் வாழ்விற்கு
அர்த்தம் கொடுப்பதென்னவோ
நீதான்;
அவர்களல்ல, அவ்வளவே...

அன்று நான்
உன்னையும் விஞ்சித்தான் இருந்தேன்...
இன்று பார்த்தாயா
என்னை?

இயற்கையின் பாடம்
பலவற்றைப் புகட்டும்;
அதில் நீ பக்குவமாய்
அருந்தியவைதான்
உன் அடுத்த எட்டிற்குப் படிக்கல்!

கவிஞர் ஸஞ்ஸீதா முஜீப் ரஹ்மான், புல்மோட்டை

# முன்னேறப் பாரு பெண்ணினமே!

விடாமுயற்சியின் விதைகள்
புதையுண்டது பூமியில்,
புழுக்கத்தில், புழுக்களின்
பழக்கத்தில் போராடி,
பெரும் விருட்சமாய்
வெற்றியுடன் எழுந்தது!

சுழலும் ஆழம் நிறைந்த குளத்திலே,
போராடிய மீன்கள்
நீரோட்டத்தில் துள்ளிச் செல்லும்.

மூச்சிறைத்த முயற்சிகள்
முழுமை அடைந்து,
எழுச்சி பெற்று பெயர் எடுக்கும்!

புதைந்த காரணத்திற்காக
எந்த விதையும் சிதையாது;
வறுமையிலும் வெறுமையிலும்
இலக்குகள் குலையாது!
அருமை உணர்ந்து
சிலிர்த்திடு தோழி!

வெந்த காடே பசுஞ்சோலையாகும்;
காட்டுத்தீயால் அழிந்த வனங்கள்
மீண்டும் நிமிர்ந்து
துளிர்வதைப் போல!

இயற்கைச் சீற்றத்தில்
அசையா குன்றாய் இரு;
பொறுமை காத்தால்
சிறப்பே என்றும்!



மூலையில் முடக்கி
முன்னேறத் தடுத்தாலும்,
மூளையைப் பயன்படுத்தி
முன்னேற்றம் காணு!

பேரிடர் காலங்களில் குழிகளில் பதுங்கு;
தாக்கிடும் பொறிகளைத் தகர்த்திடத் துவங்கு!
எழுச்சி தரும் நூல்களின் கருத்தை,
வளர்ச்சி தரும் எழுத்துக்களின் சாரத்தை
அறிந்து, நாளும் செயல்களைக் கூராக்கு!

ஆமை வேகம் புரவியாக மாறும்;
அடுக்களைப் பூனை புலியாய் தேறும்!
ஊரும் பூச்சியும் உன் தெளிவில்
உயரே இறக்கை விரித்துப் பறக்கும்!
இக்காட்சியால் உலகம் உயர்விக்கும்;
உன் இலக்கில் வெற்றி இயங்கும்!

முடங்கியது போதும் பெண்ணே!
முயற்சியில் இறங்கு...
மூச்சிறைக்கும் உன் சுவாசம்
சீரான சுவாசமாய் மாறும்!

கவிஞர் ரெஜினாபானு, மேலூர்



களிமண்ணோ செம்மண்ணோ
வேற்றுமை தெரியாமல்
முளைக்க தொடங்குகிறது
செடி (காதல் )

முளைக்கும் முன்னே
வெட்டி வீசிட கூர் தீட்ட படுகிறது
தச்சன் பட்டறையில் அருவா (ஜாதி)

கூர் தீட்டப்பட்ட அரவாவோடு
செடியே வெட்ட கிளம்பிய
மன்னர் பரம்பரை
நியாய விலை கடையில் வழங்கியே
இலவச அரிசியே பார்த்து நின்று விட்டது (பசி)

அன்பாய் இணைந்த இதயங்களின்
உன்னத உறவே (காதல் ) நாடக சபையேற்றி
(நாடக காதல்) பெயர் வைத்து விட்டார்கள்
மானுடன் எனும் மன்னர்கள்

மணமேடை காணாத காதலர்களும்
தாலி ஏராத கழுத்துக்களும்
மெட்டி மிதிக்காத பாதசுவடுகளும்
இருந்து கொண்டு தான் இருக்கிறது
கனவுகளோடு எங்கு தெரிந்தால்
கனவு கலைந்து விடுமோ என்ற அச்சத்தில்
நிறைவேறா காதலோடு ஊருக்கும் சேரிக்கும் உள்ள
இடைவெளியில்

கவிஞர் அ. அருள் மணி, பரிவிளாகம்

# சென்று போனவை

சென்று போன பலவற்றை
கொஞ்சம் திரும்பிப் பார்க்கிறேன்.
அங்கு ஒன்றுமே
இன்று இல்லை
நினைவுகளைத் தவிர.

நான் நடந்த சாலைகளில்
வீற்றிருந்த விருட்சங்கள் இல்லை;
விழுதுகளைத் தொங்கவிட்டுக்
காத்திருந்த
ஆலமரமுமில்லை.

அடிக்கடி சலசலத்துச்
சாய்ந்தெழுந்த
புல்வெளிகளுமில்லை.

கூட்டமாய் கீச்சிட்டுக்
கொண்டிருந்த கிளிகளெல்லாம்
கண்டங்கள் விட்டு
திசைமாறியதோ?

தென்னை மரங்களை
இறுகப் பற்றிக்கொண்டு
வாழ்ந்து கொண்டிருந்த
மாலைக் கிளிகளின்
மாறிய தேசம் தேடுகிறேன்.

தெளிவாய்த் தெரிந்த
இரவு விண்மீன்கள் கூட
ஒளியிழந்து நிற்கின்றன.
பதினாறாம் நிலவிலும் கூட
அந்த வானம்
புகைந்து கொண்டிருக்கிறது.



பறந்து திரிந்த
பட்டாம்பூச்சிகளின் தேசம்
பாலைவனமாய்
வெடித்துக் கிடக்கிறது.

கானல் நீரோட்டம்
தடையின்றி
விழிகளையும்
தாண்டிச் செல்கிறது.

நான் மட்டுமே
மிஞ்சி நிற்கிறேன்.
நிரந்தரமற்ற
எனது கதைகளைச் சுமந்து.

கவிஞர் சேஹூ மொஹம்மது பெனாஸிரா, முஸ்லிம் ஹல்மில்லாவ

# புத்தகம் தொலைத்த தலைமுறை

புத்தகம் தொலைத்த புதிய தலைமுறை நாம்,
பேனாவிற்குப் பதிலாய் திரை பிடித்தோம்.
கைகளில் நூலுக்குப் பதிலாய் கைபேசி,
கண்களில் அதன் வெளிச்சம் ஒட்டிக்கொண்டது.
மரத்தடி நூலகம் மறந்துபோனது,
மடோல் தீவின் சாகசம் திரைக்குள் சுருங்கியது.
அம்மா சொன்ன கதைகள் தூரமாகின,
அப்பாவின் நாவல்கள் அலமாரியில் உறங்குகின்றன,
தூசி படிந்த புத்தகங்கள் நம்மை அழைக்கின்றன,
பக்கம் புரட்டும் பழக்கத்தை நாம் தொலைத்தோம்.
ஸ்வைப் செய்யத் தெரிந்த விரல்கள்,
வாசிக்கத் தெரியாமல் தடுமாறுகின்றன.
லைக் போடத் தெரிந்த நாம்,
நூலகம் செல்ல மறந்துவிட்டோம்.
காகிதத்தின் வாசனையும் மறந்துவிட்டோம்,
கற்பனையின் வண்ணங்களும் தொலைந்துவிட்டன.
காதல் காவியங்களின் சுவையும் அறியவில்லை,
நூலறுந்த பட்டம்போல் தடம் மாறுகிறோம்.
வாழ்க்கையைத் திரையில் தேடும் நாம்,
வாழ்வின் அர்த்தத்தைப் புத்தகத்தில் இழந்தோம்.
இன்னும் தாமதமாகவில்லை நண்பர்களே,
ஒரு பக்கத்தைத் திறந்து பாருங்கள்!
அதற்குள் ஒரு உலகம் காத்திருக்கிறது,
அறிவின் கதவுகள் திறக்கக் காத்திருக்கின்றன.
வாருங்கள், மீண்டும் வாசிக்கத் தொடங்குவோம்,
நூலகங்களுக்கு புத்துயிர் கொடுப்போம்.
வார்த்தைகளோடு நட்பு கொள்வோம்,
கற்பனையின் சிறகுகளை விரிப்போம்.
புத்தகத்தை மீண்டும் கைகளில் ஏந்துவோம்,
வாசிப்பால் நம் தலைமுறையை உயிர்ப்பிப்போம்!



கவிஞர் திருமதி மோகன், நாவலப்பிட்டி (இலங்கை)

# நட்பே துணை

நன்மை புரியுமே நட்பின் இலக்கணம்,
துன்பத்தை நீக்கித் துணையாய் நிற்குமே.
நட்பின் வட்டாரம் நலத்தின் வரமாய்,
கடக்கும் பாதையைக் கவனமாய்க் காத்திடுமே.

காலத்தின் அருமை களத்தை நிறைத்து,
பாலமாய் அமையுமே பகுத்து வகையாய்.
சிந்தை ஒருமித்து சிறப்பான ஒளியாய்,
விந்தை வழியாய் வியப்பின் தரமே.

கல்லூரி வாழ்வில் கருத்தான பேச்சாய்,
சொல்லியே வளர்த்திடும் சொர்க்கத்தின் பலமே.
சொந்தங்கள் சேர்த்திடும் சேர்வையின் வரமாய்,
பந்தத்தில் நிலைக்கும் பகுப்பின் உணர்வே.

கவலைகள் மறக்கக் கண்ணிய உணர்வாய்,
உவமையாய் வழங்கும் உயர்ந்த வளமே.
சோர்ந்திடும் நேரம் சுகமாய் வார்ப்பின்,
வரமாய் வளர்க்கும் மனதில் தெம்பாய்.

குழந்தை முதலாய் குவியும் நட்பாய்,
சிறப்பின் அடையாளம் சிந்தையில் உயர்ந்ததே.
துன்பம் கண்டு தூணாக அருகில்,
இன்பப் பேச்சில் இனிமை அளிக்குமே.

கல்லூரி வாழ்வில் கணக்கில்லா அனுபவம்,
செல்லும் இடமெங்கும் சிறப்பாய் நினைக்குமே.
சொல்லிடும் வகையாய் சொந்தங்கள் கூடிடும்,
வெல்லும் தினமும் விந்தையின் பேச்சாலே.



கவிஞர் பி. அன்பழகன், கடலூர்

# நினைவுகளின் நீங்காத வாசம்

அன்பாய் அரவணைத்தவர்,
ஆலமரம் போல் ஆதரவாய் இருந்தவர்.

இன்பத்தை வாரி வாரி வழங்கியவர்,
ஈகைக் குணத்தை நடை பயிலும் காலத்திலேயே
தம் மக்களுக்குப் புகட்டியவர்.

உற்றார் உறவினர் மட்டுமின்றி,
ஊரையே சொந்தமாகக் கொண்டாடப் பெற்றவர்.

"எல்லாம் அவன் செயல்" என்பவர்,
ஏற்றிவிட்ட கரங்களை மறக்காத
மாண்புமிகு மன்னவர், என்னவர்.

ஐம்பூதங்களின் ஆசிகள் பெற்றவர்.
ஒற்றுமையாக வாழ வலியுறுத்தியவர்.

ஓங்கி ஒலிக்கும் இவரின் குரலுக்கு
அடிபணியத் தோன்றும்;
ஏனெனில் அதில் அதிகாரத்தைவிட
அன்பும், ஆதரவும்,
பாசமும், அக்கறையும் இருப்பதால்.

ஔடதமாய் இருந்தவர்,
இஃதே என்னவர்!

இன்று இல்லாமல் போனாலும்,
நினைவுகளின் வாசம் நீங்காது...
என்றென்றும்!




கவிஞர் சுமதி தசரதன், சென்னை

# தீராக்கருணையாளனின்

தன்னகத்தை இழந்தவனுக்கே,
தன்னகந்தை கழிந்தவனுக்கே,

தன்னிருள் அறிந்தவனுக்கே,
தன்னிலை கடந்தவனுக்கே,

தன்திசை மறந்தவனுக்கே,
தன்துயர் துறந்தவனுக்கே,

தானெனும் தளை தாண்டி,
தன்னை முழுதாய்
அர்ப்பணித்தவனுக்கே,



தன்னிகரிலா
அன்பின் பேரொளி
திறக்கிறது.

தீராக் கருணையாளனின்
இதயம் கிடைக்கிறது.

கவிஞர் ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

உடைந்து அழுவதில்
அப்படி ஒன்றும் பிரியமில்லைதான்.



பிரியமானவர்கள்
உதறிச் செல்லும் தருணங்களில்,
தத்தளிக்கும் மனதைக்
காப்பாற்றிக்கொள்ள
நான் எட்டிப் பிடிக்கும்
ஒரே பாதுகாப்புக் கவசம்.

இப்போதெல்லாம்
அடிக்கடி
என் கைகளுக்கு
எட்ட வேண்டியுள்ளது.

கவிஞர் முனைவர் இரா. இராஜமோகன், அயன் குறிஞ்சிப்பாடி

# என்னவனே

உன்னிடம் சண்டையிடுவதும்,
கோபம் கொள்வதும்
உன்மீது இருக்கும்
என்னில் அடங்காத அருவியினை
யாருக்கும் விட்டுக்கொடுக்க
இயலவில்லை என்பதால்தான்.

ஆயிரம் மோதல்களுக்கு இடையே
சமாதானம் இருந்தால்
புரிதல் கூடும்;
கர்வம் இருந்தால்
வாழ்க்கை சிதறும்.

காதலை வெளிப்படுத்த
உணர்வு மட்டும் போதாது,
நல்ல உள்ளமும்
இருக்க வேண்டும்.

அழகைப் பார்த்து ரசித்து,
வெட்கப்பட்டு வருவது அல்ல ஈர்ப்பு;
இருமனம் புரிந்து,
உரையாடி வருவதுதானே காதல்!

ஆசைகளைப் பூர்த்தி செய்து
மகிழ வைப்பதுதான் அன்பு.

கற்பனை என்னும் கூண்டில்
கிளியாக வாழ
ஆசை வளர்கிறேன்.
அவனின் நிழலில்.



கவிஞர் மா. மோனிஷா

# இயல்பாய் இரு

சட்டம் போட்டால்
நமது தவறுகளுக்குக்
காலம் நம்மை
தண்டிக்கிறதா?

திட்டம் போட்டால்
நமது கடைசிப் பயணத்தில்
தீ நம்மை எரிக்கிறதா?

வட்டம் போட்டால்
மழைக்காலத்தில்
வானத்தில் வானவில்
தோன்றுகிறதா?

நோட்டம் இட்டால்
நொடிக்கு நொடி
நோய் நம்மை
நோகடிக்கிறதா?



தோட்டம் போட்டால்
இரவில்
நட்சத்திரப் பூக்கள்
வானத்தில் மலர்கிறதா?

எல்லாம்
இயல்பாய் இருக்க,

மனிதா!
நீ மட்டும்
இயல்பும் புரியாது,
எதார்த்தமும் புரியாது
வாழ்கிறாய்...

கவிஞர் முனைவர் அ. சி. மு. முனியாண்டி, திருவில்லிப்புத்தூர்

# கச்சேரி ஆரம்பம்

சரியாக நள்ளிரவு
பன்னிரண்டரைக்குத்தான்
நாய்களின் கச்சேரி ஆரம்பம்!

முதலில் ஒன்று தொடக்கவுரை,
பிறகு வாழ்த்துரை,
அடுத்து கருத்துரை என
தொடர்கதைதான்...



இரண்டாவது வீட்டில்
வளர்க்கும் இளம்பருவப்
பெண்குட்டியே காரணம்.

எல்லாம் ஒன்று சேர்ந்ததும்
தினம் ஒரு காரணம்...

கருப்பு உடையணிந்து
செல்லும் காவல்காரன்,
கழியைத் தட்டிக்கொண்டு செல்லும்
காலொடிந்த தாத்தா,
பக்கத்துத் தெருவிலிருந்து வந்த
பழுப்பு நிற நாய்...

கடைசியில் ஒரு நாள்
நாய்வண்டி வந்து
எல்லாம் போய்விட்டன.

மறுநாள்
நடுநிசியில் நிசப்தம்தான்...

ஆனாலும்,
கச்சேரி இல்லை;
தூக்கமும் வரவில்லை!

கவிஞர் வளவ. துரையன், முகலிவாக்கம்

# தொலைந்து போன உறவொன்று

வெகுதூரம் போன பின்பும்,
விரைவாக முடிந்ததென்ன
என்றது என் பயணம்.

விடியலைத் தொலைத்த வண்ணம்,
வெளிச்சத்தை வேண்டியதே
என் இரு விழிகள்.



தூவானம் தூவிய மழை,
தூரல் நின்றதும்
மறந்ததென்ன மண்ணும்?

இலையுதிர் காலமதில்
இரு கைவிரல் பிடித்து வந்த உறவும்,
இங்கே இருளாகிப் போனதென்ன?

மார்கழிக் காலத்தில்
குளிர் தாங்கா என் தேகத்தை
மார்போடு சேர்த்தணைத்து
பாலூட்டிய அன்னையவள்...

ஆகாயம் வேண்டும் என்று
அனாதையாக்கி என்னை,
அழவைத்து சென்றவள்...
அடுத்த ஜென்மம் வந்திடம்மா,
எனக்குள் உயிராகி...

கவிஞர் பரிமளா மணி, தியத்தலாவ (இலங்கை)

அதிகாரம் பதவியுடன் இணைந்த ஒன்றாகும்!
அதிகாரம் வந்தவுடன் அகந்தை குடிகொண்டால்
பதவி பறிபோனவுடன் பரிதவிக்கும் நிலைவருமே!
அடித்தட்டு மக்களின் கண்ணீரைத் துடைத்து
அறவழி நடப்பதே பலனளிக்கும் எந்நாளும்!
எண்ணிலா மனுக்கள் அன்றாடம் குவிந்தாலும்
எளியோர்களின் முகங்களவை! ஏழைகளின் குரல்களவை!
களமிறங்கிச் செய்யும் தொண்டே காலமெலாம்
நிலைத்திருக்கும்! மகுடம் சூடிய தலை மக்களின்
நலன்காக்க குனிந்திருக்க வேண்டும்! அன்பும்
இரக்கமும் அதிகாரத்துடன் இணைந்திருந்தால்
இறவாப் புகழை எய்திடலாம் இவ்வுலகில்!
பலவீனம் பலத்திடம் தலை வணங்கும்!
பலம் நீதிக்குத் தலைவணங்கி நின்றிடல்
நலம் பயக்கும்! அதிகாரம் கிடைத்தவுடன்
தலைக்கனம் கொண்டு தன்னிலை மறந்தால்
காலச் சக்கரம் கவிழ்த்துவிடும் சுழற்சியிலே!
ஆள்பவரின் அதிகாரம் எளியோர்கள் நலம்பெறவே!
ஆள்பவர்கள் கடமைகளை அதிகாரமாக்கிக் கொடுத்த
வள்ளுவரின் வழிநடந்தால் என்றும் துன்பமில்லை!
சதிகாரர் கைகளில் அதிகாரம் சென்றடைந்தால்
பதவியைத் தக்கவைக்க எதையும் செய்திடுவர்!
மதியுடையோர் தம்கையில் அதிகாரம் சென்றடைய
எதிலும் தொலைநோக்குப் பார்வையுடன் செயலாற்றி
பாதுகாப்பும் பயன்களும் மக்களுக்குக் கிட்டிடுமே!
நீதியினைக் காக்க அதிகாரம் துணைநிற்கும்!
அதிகாரம் வரமாகும் அறவழியில் பயனளித்தால்!



கவிஞர் ஏ. சீ. சேஷாத்ரி

# உயிரான பூமிதான் நம்மைக் காக்கும் தாய்தான்

ஆண்டாண்டு காலமாய் நாம் வாழும் பூமிதான்,
நம்மைக் காக்கும் தாய்தான்.
எந்நாளும் பூமியைப் பேணிக் காக்கும்
குணம் நமக்கு வேண்டுமே!



பூமியைச் சாமியாய் போற்றியே வாழ்ந்திட்ட
முன்னோர்களின் வாழ்வியலை,
எதிர்காலத் தலைமுறையும்
நெஞ்சில் கொள்ள வேண்டுமே!

இயற்கையை நாளுமே போற்றிக் காக்கும்
குணமும், இயற்கையோடு இணைந்து வாழும்
நல்ல மனமும் இருந்தால்,
அழிவில்லா புனித வாழ்வை
எந்நாளும் தந்திடுமே!

மழைக்காடும், மலைகளும்,
ஆறு, குளம், ஏரி என
நீர்நிலைகள் அத்தனையும்
பூமிக்குப் பால்வார்க்கும்
இயற்கையின் அதிசயம்;
நாம் வணங்கும் சாமிதான்!

வானமும், பூமியும்,
நாம் சுவாசிக்கும் காற்றும்
நம் மூச்செனப் போற்றிடுவோம்.
சுற்றுச்சூழல் உயிரென உணர்ந்து,
அன்போடு காத்திடுவோம்!

பூமி நம் தாய்;
இயற்கை நம் உயிர்;
அவற்றைக் காப்பது
நம் தலைமுறையின் கடமை!


கவிஞர் ஜே. பி. பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

காலம் கலைத்துப் போட்ட
நாட்களை மீண்டும் சேர்க்கின்றன
சில புகைப்படங்கள்.



சிரித்த முகங்கள்,
சேர்ந்திருந்த உறவுகள்,
சிறகடித்த கனவுகள்—
எல்லாமே ஒரே நொடியில்
உயிர்பெறுகின்றன.

மறந்துபோன முகமொன்று
மனதின் கதவைத் தட்டுகிறது;
மறைந்துபோன குரலொன்று
நினைவில் ஒலிக்கிறது.



அன்று புகைப்படம் எடுத்தபோது
யாருக்குத் தெரியும்— அந்த நொடி
ஒருநாள் வாழ்க்கையாகிவிடுமென்று?

சிலர்
இன்று நம்முடன் இல்லை;
ஆனால்
அவர்களின் புன்னகை
இன்னும் நம்மோடு வாழ்கிறது.

வாழ்க்கை முன்னோக்கிப் போனாலும்,
நினைவுகள் மட்டும்
பின்னோக்கி அழைக்கின்றன.

நாம் மறந்த நாட்களை நிழற்படங்கள்
மீண்டும் நினைவூட்டுகின்றன.

நிஜத்தை மாற்ற முடியாது;
ஆனால் ஒரு நிழற்படம்
அதை மறக்க விடாது.

கவிஞர் நபீல் இப்னு இஸ்மாயில்



சின்னச் சின்ன ஏமாற்றங்கள்
இனம் புரியா தடுமாற்றங்கள்
சின்னக் கண்களுக்குள்
ஓராயிரம் கற்பனைகள்

ஒவ்வொன்றாய் எண்ணுகையில்
என்னென்னவோ உணர்வலைகள்
கண்டதென்னவோ கனத்தது மனது
கண்ணிமைக்கும் நேரத்திலோ
கலைந்தது கனவு

எண்ணம்போல் வாழ்ந்ததில்லை
ஏமாற்றமே என்னுள்
எப்படியோ வாழ்ந்துவிடலாம் என
எண்ணுகையில்
இயலாமை எனும் அரக்கன்
சற்றே உசுப்பிவிட்டுத்தான் செல்கிறான்

வலுவிழந்த கைகளுக்குள்
இன்னும் என்னென்ன
போராட்டங்களோ

வாழ்வுதனை எண்ணுகையில்
இவ்வுலகில் இன்னும்
இடர்பாடில்லா எண்ணங்களுடன்
கனவுகள் கண்களை
மெல்ல வருடித்தான் போயிற்று

பாரினிலே நாமெல்லாம்
பிறந்ததேனோ
சாதனைகள் இல்லா
சாகசங்கள் புரியவா

வேண்டாம் வேண்டாம்
விட்டுவிடுங்கள்
விழிகளின் ஈரம் இன்னும்
கசிந்துகொண்டிருக்கிறது

கவிஞர் அக்பர் ஜனுல் முன்சிலா, மருதமுனை

உயர்ந்துவரும் வெப்பநிலை
உலகினிலே அழிவுதரும்

மழைகளுமே தடங்களினால்
மண்ணெல்லாம் வறண்டிடுதே

வெள்ளம்வந்து அழிந்திடுமே
பயிரோடு மரங்களுமே

உணவுக்கு பஞ்சம்வந்தால்
மக்களுக்கு பாதிப்பே

பூமித்தாயின் கண்ணீரை
துடைத்தாலும் குறையாது

இயற்கையினைக் காத்திட்டால்
இயல்பாகும் பருவநிலை!



கவிஞர் முனைவர். இரவி சீனுவாசன், உடுமலைப்பேட்டை

மயிலாடும் கற்பாறையில்
மனமிளகிய பொழுதுகளின் மணம்
சூழும் மலைச்சோலையில்
சூழ்ந்து கொண்டது எங்கும்.

இதோ வந்துவிட்டேனென,
கற்படி அழுந்த ஒவ்வொரு அடியும்
வான்நோக்கிய பயணமாகி,
யான் நோக்கினேன் நின் திருவடி.



கண்டுவிட்டேனய்யா உனை,
கனிந்துவிட்டேனய்யா உளம்;
காலத்தில் மறவாத கல்வெட்டாகிப்
போனது ஏறிய கற்படிகள் மனதில்.

உருகினேன், மருகினேன்;
கருணை செய்தாயோ இளமுருகே!
ஔவை நாவில் சுமந்த தமிழே,
அழகே, அமிர்தமே, அறஞ்சொல் மொழியே!

இருகை சேர்த்தணைத்து மகிழவே
பிள்ளை உருக்கொண்டு நின்றாயோ?
இருகை குவித்து உனைப் பாடினேன்;
திருப்பாதம் குழைய வாராயோ!

கவிஞர் ஜெயப்பிரபா, சென்னை-81

எத்தனை
அலைபேசி
வெளிச்சங்களாலும்
ஒரு
தெருவிளக்கை
மீட்டுத்தர இயலாது



கவிஞர் அன்னலட்சுமி சரவணன்

# அவனில் அழுக்கில்லை

அவன் அணிந்திருந்தது
என்னவோ அழுக்கு உடைதான்;
அவன் உடலும் அழுக்கு.
எல்லோரும் அவனை
அருவருப்பாகப் பார்த்தார்கள்;
நானும் கூட.

அங்கு சிதறிக் கிடந்த
குப்பைகளைச் சேர்த்து
குப்பைத்தொட்டியில் போட்டான்.

அப்போதுதான் தெரிந்தது
அவனில் அழுக்கில்லை;
அவன் மனதிலும் அழுக்கில்லை.

இப்போது, அவனைத் தவிர
எல்லோரையும் அருவருப்பாக,
என்னையும் அருவருப்பாக உணர்ந்தேன்.
அவனோ இதையும் கடந்து போனான்.

அவள் மனநிலை சரியில்லாதவள்;
கவனிப்பார் யாருமின்றி
சாலைகளில் திரிந்தவளை
"பைத்தியக்காரி" என்றனர்.

அவளும் அழுக்குடன்,
உடையோ கிழிசலுடன்.
உடையின் கிழிசலால்
அவளின் மானத்தைப்
பங்கப்படுத்திய
வக்கிரக் கண்கள்.




அவன் வந்தான்;
கிழியாத கந்தலாடையை
அவளின் மீது போர்த்திவிட்டு
கடந்து போனான்.
அவனில் அழுக்கில்லை;
அவன் மனதிலும் அழுக்கில்லை.

அவனைப் பார்ப்பவர்களின்
மனதில்தான் அழுக்கு என்பதை
முழுமையாய் உணர்ந்தேன்.

மனதைப் பாருங்கள்;
மனிதனாய்ப் பாருங்கள்.
ஆடையை வைத்து
மதிப்பிடுவது
எப்போதும் வேண்டாம்.

யதார்த்தக் காட்சிகளை
எழுத்தாக்கிய

கவிஞர் செ. இலட்சுமணக்குமார், ஈரோடு

# உறவினில் இனிமை

பிறந்தவீட்டு உறவு,
புகுந்தவீட்டு உறவு
பல வண்ணத்தின்
சாயல்களில்தான்.

பிடித்தம் என்பது
அனைத்துமே
நம் அறிவுரைக் கோட்டிற்குள்
அடங்கிவிடும்.



வேறுபாடுகள் நிறைந்த
ஒரு புதிய களம்,
முற்றிலும் மாற்றியமைத்த
வடிவத்தில்...

முரண்கள் நிறைந்த உறவுகள்,
புதிர் போடும் மனங்கள்.

உறவினில் இனிமை
விட்டுக்கொடுத்தலில்;
தொடர்வது அன்பினில்.

கவிஞர் சுந்தரி பாஸ்கரன், திருப்பூண்டி, நாகப்பட்டினம்

# மாற்றம் என்றொரு மாயை

இயல்பை மறைத்து,
நடந்ததை மறந்து
வாழ்வதுதான்
மாற்றமா?

பார்த்த முகங்கள்
மறந்திடுமா?
பேசி சிரித்த நொடிகள்
மனதின் நினைவில்
நீங்கிடுமா?

விரும்பிக் கிடைக்கும்
அன்பை விலக்கித் தள்ளி
நடப்பதுதான்
இன்றைய நாகரிகமா?



காலம் மாறிப் போனாலும்,
கடந்த பயணங்கள்
தம் தடங்களை
மறந்திடுமா?

யாவும் நினைவில் இருந்தும்,
யாரோ ஒருவர் போல
கடந்து செல்வதும்...

அன்போடு பழகிய
அந்த நாட்களை
மறந்தது போல
நடிப்பதும் இயல்பென்றால்,

எதையும் மறக்காமல்,
தன்னிலை மாறாமல்
இருப்பதும்
இயல்புதான்...

மாற்றம் அழகானதுதான்...
நமக்குப் பிடித்த
அந்த யாரோ ஒருவர்
மாறாத வரையில் மட்டும்...

கவிஞர் க. கார்த்திகா மணிகண்டன், கோவை

# தவம்

அவனை ஒருமுறை காணவே
என் விழிகள் தவம் கிடக்கின்றன.

அவன் ஸ்பரிசம்
ஒரு கணமேனும்
என்னைத் தீண்டாதா என்ற ஏக்கம்,
என் நெஞ்சை நாளும் வாட்டுகின்றது.

வாழ்நாளில் நான் கற்ற
மிக நீண்ட பொறுமை இதுதான்.

என் ஆசைகளையும்,
என் கனவுகளையும்,
என்னுள் இருந்த அனைத்தையும்
தியாகம் செய்து,



அவன் வருவான் என்ற
ஒற்றை நம்பிக்கையை மட்டும் சுமந்தபடி,
என் உயிருள்ள ஒவ்வொரு நொடியும்
அவனுக்காகக் காத்திருப்பேன்.

காத்திருப்பதே என் தவமாகி,
அவனே என் தவத்தின் வரமாகட்டும்.

கவிஞர் நிஸ்ரீனா மதீனா

## அதிலிருந்து மட்டுமல்ல


நம்பிக்கை
வார்த்தைகளில்
மட்டுமல்ல;

கடந்தவைகளில்
பெற்ற வெற்றியில்,

கிடைத்த தோல்வியில்
பெற்ற அனுபவத்தில்,

அதனால் கற்றுக்கொண்ட
புதிய விஷயத்தில்,

விஷயஞானம்
மேம்படக் கொண்ட
பயிற்சியில்...



இவைகளைக் கொண்டு
செயல் முடித்தால்,
கிடைக்கப் போகிற
நல்ல முடிவால்
பெறப் போகிறவற்றுக்கான
எண்ணக் காட்சிகளில்!

கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

ஆபீஸிலே போனில் பேசிக் கொண்டிருந்த பிரபு வேகமாக அருணுக்கு அருகில் வந்து "என்னிடமே மறைச்சுட்டே இல்லை" ? என்றான்.
"என்னடா என்ன விஷயம்?" என்று கேட்டான் அருண்.
"அதை அப்புறம் சொல்கிறேன்" என்றவன் "திரவியம், பாலு, கென்னடி வாங்கடா இன்றைக்கு நம்ம அருண் சார் நமக்கு பார்ட்டி வைக்கப் போகிறார்" என்றான்.
மூவரும்வந்து அருணைச் சூழ்ந்து கொள்ள "என்ன விஷயம் என்று சொல்லித் தொலையேன்?" என்றான் அருண் பிரபுவிடம்.

"உங்க அம்மா போனிலே சொன்னாங்க.... உனக்கு பொண்ணு பார்த்திருக் கிறார்களாம். நிச்சயம் பண்ணப் போகிறார்களாம். பொண்ணு ஏர் இந்தியாவிலே செய்கிறதாம்" என்றான் பிரபு.
"டேய் ஏண்டா எங்களிடம் மறைத்தாய். படுபாவி. நாங்க என்ன? ... உன் வருங்கால் மனைவியைப் பார்த்து கடித்து தின்று விடுவோம்னு நினைச்சியா" என்றான் பாலு.
"அது இல்லேடா......."
"என்னது, இருக்கோ இல்லையோ இன்றைக்கு சயான் ஸ்டேஷனுக்கு அருகில் இருக்கின்ற 'பாவ்னா' பீர் பாரிலே பார்ட்டி இருக்கிறது இல்லையா அருண்" என்றான் கென்னடி.
"ஓ.கே..... பாபா..... ஆனால் நான் இன்னும் பெண்ணையே பார்க்கவில்லையடா"
"நாங்க மட்டும் உன் பொண்டாட்டியை பார்த்தாச்சாக்கும். முதல்லே பார்ட்டி வையுடா" என்றான் திரவியம்.
"எப்படா போகலாம்" என்றான் பிரபு.
"ஒன்பது மணிக்குப் பிறகு போனால் தாண்டா ரெக்கார்ட் டான்ஸ் சூடு பிடிக்கும்'' என்றான் கென்னடி.
"ஓ.கே. பாபா. ஒன்பது மணிக்குப் போகலாம். இப்போது என்னைக் கொஞ்சம் வேலை செய்ய விடுகிறீர்களா'' என்றான் அருண்.
"பெரிய வேலை செய்றதுக்கு வந்துட்டான் பாரு" என்று அருணின் தலையைத் தட்டி விட்டுப் போனான்.

இரவில் எல்லோரும் 'பாவனா' பாருக்குள் நுழைந்து ஒரு வெளிச்சமில்லாத மேஜையைத் தேர்ந்தெடுத்து அமர்ந்து ஆளாளுக்கு விரும்பின "மக்" பெனி பீர் ஆர்டர் கொடுத்தார்கள்.

மேடையில் ஆடிக்கொண்டிருந்த இரண்டு பெண்களும் பாட்டு முடிந்த உடன் இறங்கிப் போக, "அருண் ஒரு அட்டகாசமான பொண்ணு ஆட வரும் பாரு. சே! அந்த இடுப்பையே இன்றைக்கு முழுவதும் பார்த்துக் கொண்டிருக்கலாம்" என்று பிரபு சொல்ல ...எங்கோ மூலையிலிருந்து மெலிதாக ஆரம்பித்த இசை வெள்ளம் அதிரத் தொடங்கி "மைனே பியார் கியா" என்ற பாடலை பிரசவித்து மேடைக்கு வந்தவள் குனிந்து "அஸ்லாம் அலேக்கும்" ஸ்டைலில் குனிந்து விட்டு ஆடத் தொடங்கியதும் அதிர்ந்து போனான் அருண்.

"இந்தப் பெண்.. இன்று காலையிலே ஸ்டேஷனில் எனக்குப் பயந்து போய் கூட்டத்திலே ஒதுங்கியவள்., என்னிடம் வீடியோ கேஸட்டைப் போட்டு விட்டு ஓடியவள்., ஒரு ரிக்கார்ட் டேன்சரா. இவள் என்ன கேஸட் கொடுத்தாள் என்று கூடத் திறந்து பார்க்க வில்லை. சூட்கேஸில் போட்டது அப்படியே கிடக்கிறது என்று நினைத்துக் கொண்டான்.
பாரில் இருந்தவர்கள் கையில் ஐந்து ரூபாய் நோட்டைத் தூக்கிக் காட்ட நடனத்தின் இடையே இறங்கி அவர்கள் கன்னத்தில் தட்டி விட்டு ரூபாயை வாங்கி மார்பின் மென்மையான பகுதிகளுக்குள் அடைத்துக் கொண்டு திரும்பவும் மேடையேறி ஆட ஆரம்பித்தாள்.

அருண் பாக்கெட்டிலிருந்து ஐந்து ரூபாய் நோட்டை எடுத்து உயர்த்திக் காட்ட "பாருப்பா கல்யாணம் முடிக்கப் போறவன் பண்ணுகிற வேலையா இது" என்றான் கென்னடி.

மேடையிலிருந்து இறங்கி வந்தவள் அருணைப் பார்த்ததும் ஒரு முறைத் தடுமாறியவள் பணத்தை வாங்கிக் கொண்டு அவன் கன்னத்தில் தட்டி விட்டுப் போனாள்.

பாடல் முடிந்ததும் மேடையிலிருந்து இறங்கி உள்ளே போய் விட்டாள். நண்பர்கள் அளவிற்கதிகமாக பீரை ருசித்து விட்டு பரிமாறிக் கொண்டிருந்த பெண் சர்வர்களிடம் தொடக் கூடாத இடங்களில் இடித்துக் கொண்டு கைதட்டி சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

அருண் 'அந்தப் பெண் எப்படியும் தன்னைத் தேடி வருவாள்'. அல்லது 'எப்படியாவது தனக்கு ஏதாவது மெஸெஜ் வரும்' என்று எண்ணியவாறு அடுத்த முறை அவள் 'ஹவ ஹவாய்' பாடலுக்கு நடனமாட வந்த போது ஐந்து ரூபாய் எடுத்து உயர்த்திக் காட்டினான்.

அவள் இறங்கி வந்து அவன் கன்னத்தைத் தட்டி விட்டு திரும்பிப் பார்க்காமல் மேடைக்குத் திரும்பினாள்.

பாரின் இன்னொரு மேஜையில் அமர்ந்திருந்த சுகுமாரும் வஸந்தும் அவளைக் கவனித்துக் கொண்டே பீர் சப்பிக் கொண்டிருந்தார்கள்.

"என்ன சுகு கோழியை இங்கேயே மடக்கி கேட்டிருவோமா... இல்லேன்னா.."

"வேண்டாம் வஸந்த். வீணாகப் பிரச்சினை வரும். அவள் எப்படியும் இங்கே ஆட வருவாள் என்று தெரியுமென்று நமக்கு நன்றாக தெரிந்தது தானே. போகும் போது எப்படியும் பிடித்து விடலாம். பாரிலிருந்து வெளியே போவதற்கு இந்தக் கதவைத் தவிர வேறு வழியே கிடையாது" என்றான்.

"சரிப்பா. ஆனால் இனி தவற விட்டு விடக் கூடாது" என்றான் சுகுமார்.

"என்ன வினிதா அவ்வளவு எளிதில் நம்மிடமிருந்து தப்பி விடுவாளா?" என்றான் சுகுமார்.

பாடல் முடிந்ததும் உடை மாற்ற வந்த வினிதா பணத்தை எடுத்து ஒழுங்காக அடுக்கி வைத்துக் கொண்டிருக்கும் போது ஒரு ஐந்து ரூபாய் நோட்டில் "உன்னை யார் ஆடச் சொன்னது" என்று எழுதியிருப்பதை திருப்பிப் பார்த்தாள். "வினி தப்பி விடு. நானும் வஸந்தும் மாறு வேடத்தில் வந்திருக்கிறோம். உன் சுகு" என்று எழுதியிருந்தது.

அந்த ஏ.ஸி. அறையிலும் அவளுக்கு மெதுவாக வியர்க்க ஆரம்பித்தது. மெதுவாக பாத்ரூமிற்குள் நுழைந்தவள் வென்டிலேட்டரில் வைத்திருந்த கண்ணாடிகளை எடுத்து விட்டு மறுபக்கம் ஏறிச் சாடி வேகமாக மெயின் ரோட்டிற்கு வந்து ஒரு ஆட்டோவில் ஏறி "ஜுகு போப்பா" என்றாள்.

"அடுத்த பாடலுக்கு வினிதா ஆடவருவாள் என்று எதிர் பார்த்த வஸந்திற்கு ஆச்சரியமாக இருந்தது.

"என்னடா சுகு வினிதா கொஞ்ச நேரமா ஆட வரவில்லை. எங்கேயாவது போய் விட்டாளா?" என்றான் வஸந்த் பதட்டத்தோடு.

"அதைத்தான் நானும் கவனிக்கிறேன்" என்றான் சுகுமார் போலியான பதட்டத்தை உருவாக்கிக் கொண்டு.

"சரி வா. உள்ளே போய் பார்க்கலாம்" என்ற வஸந்த் வேகமாக மேக்கப் ரூமிற்குள் வந்தான். அங்கே உடை மாற்றிக் கொண்டிருந்த ஒரு பெண் வாரி சுருட்டிக் கொண்டு நின்றாள்.

"வினிதா எங்கே?" என்றான் பின்னால் வந்த சுகுமார்.

"அவளுக்கு உடம்பிற்குச் சரியில்லை என்று சொல்லி விட்டுப் போய் விட்டாளே" என்றான் அந்தப் பெண்.

தலையிலடித்துக் கொண்ட வஸந்த் "சுகு கேப்டனுக்கு என்ன பதில் சொல்லப் போகிறோம்" என்று கேட்டான்.

"எனக்கும் அது தான் புரியவில்லை" என்றான் உள்ளுக்குள்ளெ சிரித்துக் கொண்டு.

தொடரும்...

கவிஞர் இராஜகை நிலவன், மும்பை

# கவிஞர் வண்ணதாசன்

கட்டுரை

பிறப்பு, கல்வி:

வண்ணதாசனின் இயற்பெயர் சி.கல்யாணசுந்தரம். வண்ணதாசன் தி.க.சிவசங்கரன், தெய்வானை இணையருக்கு ஆகஸ்ட் 22, 1946-ல் திருநெல்வேலியில் பிறந்தார். உடன் பிறந்தவர்கள் ஒரு அண்ணன், இரண்டு தங்கைகள், ஒரு தம்பி. திருநெல்வேலி டவுண், ஷாஃப்டர் உயர் நிலைப் பள்ளியில் உயர்நிலைப்பள்ளி வரை பயின்றார். பாளையங்கோட்டை புனித யோவான் கல்லூரியில் புகுமுக வகுப்பு பயின்றார். தூத்துக்குடி வ.உ.சிதம்பரம் கல்லூரியில் வணிகவியலில் இளங்கலைப்பட்டம் பெற்றார்.



தமிழ் இலக்கிய உலகில் எளிமையான சொற்களால் ஆழமான உணர்வுகளை வெளிப்படுத்திய படைப்பாளிகளில் குறிப்பிடத்தக்கவர் வண்ணதாசன். கவிதை, சிறுகதை, கட்டுரை எனப் பல தளங்களில் தனது தனித்துவமான எழுத்தால் வாசகர்களின் மனதில் இடம்பிடித்தவர். கவிதை உலகில் "கல்யாண்ஜி" என்ற பெயரிலும், சிறுகதை உலகில் "வண்ணதாசன்" என்ற பெயரிலும் அறியப்படுகிறார்.

எளிமைக்குள் இருக்கும் இலக்கியம்:

வண்ணதாசனின் எழுத்தின் மிகப்பெரிய சிறப்பு எளிமை. மிகப்பெரிய சொற்களையோ, சிக்கலான மொழிநடையையோ பயன்படுத்தாமல், நாம் அன்றாடம் பார்க்கும் மனிதர்களையும் நிகழ்வுகளையும் மிக நுட்பமாகப் பதிவு செய்வார்.

ஒரு மழைத்துளி, ஒரு மரம், ஒரு பறவை, தெருவில் செல்லும் மனிதர், நண்பரின் பேச்சு, வீட்டின் அமைதி என நாம் சாதாரணமாகக் கடந்து செல்லும் சிறிய விஷயங்களுக்குள் இருக்கும் அழகையும் உணர்வையும் அவரது எழுத்து நமக்குக் காட்டுகிறது.

திரு. அ. வில்சன், இதழாசிரியர்

# கவிஞர் வண்ணதாசன்

கட்டுரை

### மனிதநேயத்தின் குரல்




வண்ணதாசனின் படைப்புகளில் மனிதர்கள் முக்கியமானவர்கள். அவருடைய கதைகளிலும் கவிதைகளிலும் சாதாரண மனிதர்களின் வாழ்க்கை, அவர்களின் மகிழ்ச்சி, துயரம், உறவுகள், ஏக்கம், அன்பு போன்றவை இயல்பாக வெளிப்படுகின்றன.

அவருடைய எழுத்தில் மனிதர்களை உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்று பிரிக்கும் பார்வை இல்லை. ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருக்கும் தனித்தன்மையையும் உணர்வையும் மதிக்கும் மனிதநேயப் பார்வை காணப்படுகிறது.

### கவிதை உலகில் ‘கல்யாண்ஜி’:

"கல்யாண்ஜி" என்ற பெயரில் வண்ணதாசன் எழுதிய கவிதைகள் தனித்துவமானவை. மிகக் குறைந்த சொற்களில் மிகுந்த உணர்வைத் தரும் திறன் அவரது கவிதைகளுக்கு உண்டு.
அவரது கவிதைகளில் காதல், நட்பு, பிரிவு, நினைவு, இயற்கை, மனித உறவுகள் போன்றவை நுட்பமாக வெளிப்படுகின்றன. வாழ்க்கையின் பெரிய தத்துவங்களைச் சிறிய காட்சிகளின் வழியாக உணர்த்துவது அவரது கவிதைகளின் சிறப்பு.

### சிறுகதைகளின் தனித்துவம்:

வண்ணதாசனின் சிறுகதைகள் தமிழ் இலக்கியத்தில் தனி இடம் பெற்றவை. அவரது கதைகளில் மிகப்பெரிய சம்பவங்களைத் தேட வேண்டியதில்லை. சாதாரண வாழ்க்கையில் நடக்கும் சிறிய நிகழ்வுகளே கதையாக மாறுகின்றன.

திரு. அ. வில்சன், இதழாசிரியர்

**விருதுகளும் அங்கீகாரமும்:**

வண்ணதாசனின் இலக்கியப் பங்களிப்பை மதித்து பல்வேறு விருதுகளும் அங்கீகாரங்களும் வழங்கப்பட்டுள்ளன. குறிப்பாக 2016ஆம் ஆண்டிற்கான சாகித்ய அகாதெமி விருது அவரது "ஒரு சிறு இசை" என்ற சிறுகதைத் தொகுப்புக்காக வழங்கப்பட்டது. இது அவரது நீண்டகால இலக்கியப் பயணத்திற்குக் கிடைத்த முக்கியமான அங்கீகாரமாகும்.


**நூல் பட்டியல்:**




- கவிதைத் தொகுப்புகள்
- புலரி (1981)
- கல்யாண்ஜி கவிதைகள் (1987)
- முன்பின் (1994)
- அந்நியமற்ற நதி (1997)
- நிலா பார்த்தல் (2000)
- கல்யாண்ஜி முழுத்தொகுப்பு (2001)
- உறக்கமற்ற மழைத்துளி (2005)
- கல்யாண்ஜி தேர்ந்தெடுத்த கவிதைகள் (2007)
- இன்னொரு கேளிச்சித்திரம் (2008)
- மணல் உள்ள ஆறு (2011)

**சிறுகதைத் தொகுப்பு**

- கலைக்க முடியாத ஒப்பனைகள் (1976)
- தோட்டத்துக்கு வெளியிலும் சில பூக்கள் (1978)
- சமவெளி (1983)
- பெயர் தெரியாமல் ஒரு பறவை (1985)
- மனுஷா மனுஷா (1990)
- கனிவு (1992)
- நடுகை (1996)
- கிருஷ்ணன் வைத்த வீடு (2000)




- வண்ணதாசன் கதைகள் தொகுப்பு (2001)
- பெய்தலும் ஒய்தலும் (2007)
- ஒளியிலே தெரிவது (2010)
- ஒரு சிறு இசை (2013)
- நாபிக் கமலம் (2016)
- கமழ்ச்சி (2017)
- மதுரம் (2019)
- தீரா நதி (2020)
- நாவல்
- சின்னு முதல் சின்னு வரை (1991)
- உயரப்பறத்தல்
- சிறார் நூல்கள்
- ஓர் உல்லாசப் பயணம்

**கட்டுரைகள்**

- அகம் புறம் (நாட்குறிப்பு & நினைவுக்குறிப்பு) (2021)
- சின்ன விஷயங்களின் மனிதன் (2016)
- வண்ணதாசன் கடிதங்கள்
- கடிதங்கள்
- எல்லோர்க்கும் அன்புடன் (1995)
- சில இறகுகள் பறவைகள்

**நிறைவாக:**

வண்ணதாசனின் எழுத்து ஆர்ப்பாட்டம் இல்லாதது; ஆனால் ஆழமானது. அவர் பெரிய கருத்துகளைப் பெரிய வார்த்தைகளால் சொல்ல முயல்வதில்லை. மாறாக, ஒரு சிறிய நிகழ்வின் வழியாக வாழ்க்கையின் பெரிய உண்மையை உணர்த்துகிறார்.

வாழ்க்கையை ரசிக்கவும், மனிதர்களை நேசிக்கவும், இயற்கையை கவனிக்கவும் கற்றுத் தரும் எழுத்து வண்ணதாசனுடையது.

திரு. அ. வில்சன், இதழாசிரியர்

## நாளை நமதே

அன்பை விதைத்திடு;

அது ஆயிரம் இதயங்களில் மலரும்.

அன்புடன் வாழ்ந்திடு;

உன் வாழ்வே அர்த்தமுள்ளதாய் மாறும்.

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

அகமும் தமிழே

முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு  அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு  சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa  www.aagaramuthala.com  aagaramuthala@gmail.com